Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, MAY 16, 2023

செவ்வாய்க்கிழமை மே 16, 2023 | ஒளி: 08 கதிர்: 271 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## பால்மா, சீனி விலைகள் குறைத்தன



பால் மா மற்றும் சீனி ஆகியவற்றின் விலைகளை குறைத்துள்ளதாகவும் திங்கட்கிழமை (15) முதல் புதிய விலைகள் அமலாகும் என்றும் லங்கா சதொச அறிவித்தது.

தொடர்ச்சி P2



செய்திகளை கட்டமைக்காமல்

## முறையாக ஜனாதிபதி தேர்தலை நடத்துங்கள்

### ஒத்துழைப்பை வழங்குகிறோம் என்கிறார் சஜித்

பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் பல்வேறு செய்திகளை கட்டமைக்காமல், முறையாக ஜனாதிபதி தேர்தலை நடத்தினால், அதற்குத் தேவையான சகல ஒத்துழைப்பை வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அரசாங்கம்

தொடர்ச்சி P2

## மொட்டின் கைதியாக ஜனாதிபதி உள்ளார்



தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கைதியாகியுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளரும் முன்னாள் எம்.பியுமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம், பொலிஸாரையும் இராணுவத்தையும் கொழும்புக்கு வரவழைத்து நாட்டை.

தொடர்ச்சி P2

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க

# கடுமையான சட்டத்தை உருவாக்குங்கள்

### சட்டத் துறையினருக்கு ஜனாதிபதி பணிப்புரை

ஒரு சில ஆசிரியர்கள், முதியவர்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறு தரப்பினரால் தொடர்ச்சியாக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களை விரைவாக தடுக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க கடுமையான சட்டத்தை உருவாக்குமாறு சட்டத் துறையினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவ்வாறான செயல்களுக்கு கடுமையான தண்டனை வழங்கும் சட்டக் கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.



களுத்துறை ஹோட்டல் ஒன்றின் மேல் மாடியில் இருந்து குதித்து 16 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம், களுத்துறை தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரால் 16 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றமை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

நாட்டின் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு தனியான சட்டமொன்றை கொண்டு வர வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக தற்போதுள்ள சட்டங்களைத் திருத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்தச் சட்டக் கட்டமைப்பை தயாரிக்கும்போது, அலைபேசி, சமூக வலைத்தளங்கள் போன்றவற்றை பயன்படுத்தி சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



களுத்துறை சிறுமி மரணம்

## மூவருக்கு விளக்கமறியல்: ஒருவருக்கு பிணை

களுத்துறையில் 16 வயது சிறுமியின் நிர்வாண சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் குறித்து கைது செய்யப்பட்ட 29 வயதான பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட மூவரையும் மே 26 வரை விளக்கமறியலில் வைக்குமாறு களுத்துறை நீதவான் நீதிமன்றம், திங்கட்கிழமை (15) உத்தரவிட்டது.

சிறுமியை விடுதிக்கு அழைத்துச் சென்ற இளம் தம்பதியினர் மற்றும் பிரதான சந்தேகநபர் மற்றும் ஹோட்டல் உரிமையாளரின் மனைவி ஆகிய நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

## மஹிந்த பலவந்தமாக பிரதமர் பதவியை ஏற்கார்



மஹிந்த ராஜபக்ஷ, களவாக அல்லது பலவந்தமாக இராணுவத்தை பயன்படுத்தி பிரதமர் பதவியை எடுக்கமாட்டார் என்று தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி சாஹர காரியவசம், மக்களுக்காக பதவியை கைவிடும் ஒரேயொரு தலைவர் மஹிந்த ராஜபக்ஷ என்றார்.

தொடர்ச்சி P2

## மே.22 உதயமாகும்



தனது புதிய அரசியல் கட்சியான ஐக்கிய குடியரசு முன்னணி, மே மாதம் 22 ஆம் திகதியன்று ஆரம்பிப்பதில் தான் உறுதியாக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

“நாங்கள் வெறுமனே சொல்லிக் கொண்டு இருப்பவர்கள் இல்லை. நாங்கள் செய்து காட்டுபவர்கள்” என கண்டியில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை திங்கட்கிழமை (15) சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே பாட்டலி சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்தார்.

## சீரற்ற வானிலையால் 1,872 பேர் பாதிப்பு

### தெற்கில் அதிக பாதிப்பு



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக கடந்த 5 நாள்களில் 428 குடும்பங்களைச் சேர்ந்த 1,872 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 7 பேர் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

நுரைச்சோலை 3ஆம் அலகு

## 100 நாள்களுக்கு மூடப்படும்



நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கும் அலகு, திட்டமிடப்பட்ட பராமரிப்பு பணிகளுக்காக ஜூன் 13 ஆம் திகதி முதல் 100 நாள்களுக்கு மூடப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



ஈஸ்டர் தாக்குதல்

## இப்ராஹிம் உட்பட 3 பேரின் ஆட்சேபனைகள் நிராகரிப்பு

ஈஸ்டர் தினமான 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய தற்கொலைதாரிகளான மொஹமட் இல்ஹாம் மற்றும் மொஹமட் இன்ஸாப் மற்றும் இருவரின் தந்தையும் கோடீஸ்வர வியாபாரியுமான மொஹமட் இப்ராஹிம் ஆகிய பிரதிவாதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை ஆட்சேபனைகளை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, திங்கட்கிழமை (15) நிராகரித்தார்.

தொடர்ச்சி P2

## கம்பஹாவில் டெங்கு தீவிரம்

### கட்டுக்கடங்காமல் பரவுவதாக அறிவிப்பு



கம்பஹா மாவட்டத்தில் டெங்கு பரவல் கட்டுப்பாட்டை மீறி வருவதாகவும் கம்பஹா மற்றும் கொழும்பில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சீரான வேகத்தில் அதிகரித்து வருவதாகவும் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

ஆறு வருடங்களாகியும்

## விமலுக்கு எதிரான வழக்கில் விசாரணை ஆரம்பிக்கவில்லை



முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக ஊழல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துள்ள நிலையில் சாட்சிய விசாரணையை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன,

தொடர்ச்சி P2

## அரசாங்கங்களை கவிழ்க்க மக்களுக்கு உரிமை உண்டு

### அரசை கவிழ்க்க உரிமை இல்லை என்கிறார் பிரசன்ன



அரசாங்கத்தை கவிழ்க்க மக்களுக்கு உரிமை உண்டு; ஆனால் அரசை கவிழ்க்க யாருக்கும் உரிமை இல்லை என்றும் இது ஒரு பயங்கரவாத செயல் என்றும் தெரிவித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாட்டில் இடம்பெற்று வரும் போராட்டங்களால் நாட்டை மீண்டும் சீர்குலைக்க இடமளிக்கப்பட மாட்டாது என்று வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

## எனக்கு அந்த மூன்றும் தேவையில்லை



“என்னுடைய மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும் அனைத்து வேலை திட்டங்களிலும் நான் முன்னின்று செயற்படுவேன். கட்சிகளோ, சின்னங்களோ மற்றும் வர்ணங்களோ எனக்குத் தேவையில்லை. என் மக்களின் எண்ணங்களே முக்கியம்” என்று இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 40 வருடங்களுக்கு பின் முறைப்படி ஆரம்பம்

நிதர்ஷன் வினோத்



வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு, கொடிச்சீலை உபயகாரர்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# முறையாக ஜனாதிபதி...

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (15) கூடிய எதிர்க்கட்சிகளின் சர்வகட்சி ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அரசாங்கம் தாம் நினைக்கும் நேரங்களில், தாம் நினைக்கும் விதத்தில் தமது காலக்கெடுவுக்கு ஏற்ற வகையில் தேர்தல் வரைபடத்தை உருவாக்குவது ஜனநாயகச் செயல் அல்ல என்றார்.

ஜனாதிபதியோ அல்லது அவருக்கு ஆதரவானோரின் விருப்பத்திற்கேற்ப தேர்தல் வரைபடத்தை தயாரிப்பது தவறு எனவும் சுட்டிக்காட்டினார்.

ஆனால் அரசாங்கம் கொண்டுவருவதற்கு தயாராக உள்ள, ஜனாதிபதி தேர்தலை திட்டமிட்ட நேரத்திற்கு முன்னதாக நடத்தும் பிரேரணையை எதிர்கட்சியாக முழுமையாக ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதனை விரைவில் நடத்துவதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கொண்டுவருவதற்குத் தேவையான பூரண ஒத்துழைப்பை நல்குவதாகவும்,ஜனாதிபதித் தேர்தல் சவாலை ஏற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அதேபோல், எதிர்க்கட்சிகளின் சகல அரசியல் சக்திகளையும் பயன்படுத்தி தேசிய கொள்கைகள் மற்றும் தேசிய அபிலாஷைகளை மையமாகக் கொண்ட பயணத்திற்கு தயார் என்றார்.

பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் பல்வேறு செய்திகளை கட்டமைக்காமல் முறையாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால், அதற்குத் தேவையான சகல ஒத்துழைப்பை வழங்குவதாக குறிப்பிட்டார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதியொருவரின் கீழ் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் இழுதடிப்புச் செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதாக மேலும் தெரிவித்தார்.

# மொட்டின் கைதியாக...

கொழும்பில் திங்கட்கிழமை (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதற்கும் மொட்டுக் கட்சியின் ஊழல்வாதிகளுக்கு அமைச்சர் பதவி கோரியும் ஆளுநர்கள் பதவி விலகாமல் இருப்பதற்கும் ஜனாதிபதிக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டை பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்துவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியமானது எனவும் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டார்.

# கம்பஹாவில் டெங்கு தீவிரம்

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மற்றும் பிராந்திய அதிகாரிகளின் மெத்தனமான அணுகுமுறையால், இரண்டு மாவட்டங்களிலும் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

டெங்கு பரவுவதைத் தடுப்பதற்கான தரவுகளை பகுப்பாய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகள் தவறிவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மே மாதத்தின் மதல் இரண்டு வாரங்களுக்குள் சுமார் 4,000 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மொத்தம் 33,656 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 14ஆம் திகதி வரை 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

நாட்டில் தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக நுளம்புகள் பெருகிவருவதாக பிரிவு அறிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதலாவது வாரத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், நாடு முழுவதும் மொத்தம் 1,954 டெங்கு நோயாளர்கள் பதிவாகிய நிலையில், கம்பஹா மாவட்டத்தில் 475 பேர் கண்டறியப்பட்டுள்ளதுடன், கொழும்பில் 412 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

# விமலுக்கு எதிரான வழக்கில்...

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்கவுக்கு திங்கட்கிழமை (15) அறிவித்தார்.

அமைச்சராக பதவி வகித்து ஆறு வருட காலப்பகுதிக்குள் 75 மில்லியன் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத பணம் மற்றும் சொத்துக்களை சேர்த்ததாக விமல் வீரவன்சவுக்கு எதிராக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், 39 குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். 2009 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் அறிவிக்கப்படாத சொத்துக்கள் மூலம் அமைச்சர் இந்தக் குற்றத்தைச் செய்துள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த பணம் மற்றும் சொத்துக்களை அமைச்சர் வீரவன்ச, இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் இலஞ்ச ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.வழக்கை ஒப்படைத்து பராமரிக்க முடியாது என பிரதிவாதி முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகள் தொடர்பில் அரசாங்கத் தரப்பு எழுத்துமூல உரைகளை சமர்ப்பித்துள்ளதாக சுட்டிக்காட்டிய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் காலதாமதத்தை கருத்தில் கொண்டு, பிரதிவாதிகளின் அடிப்படை ஆட்சேபனைகளை விரைந்து முடிவெடுக்க வேண்டும் கோரிக்கை விடுத்தார்.

# 40 வருடங்களுக்கு...

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளை தொடர்ந்து திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ள சிவபெருமானுக்கு திங்கட்கிழமை (15) காலை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி எடுத்துச் செல்லப்பட்டு, திருநெல்வேலி கென்னடி வீதியில் உள்ள சண்முகநாதன் கபிலன் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டு பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் வழங்கிவைக்கப்பட்டது.

இநிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம சிவாச்சாரியார் மற்றும் ஆலய திருப்பணி சபையை சேர்ந்த உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர்.திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா மே 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 1982ம் ஆண்டிற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீஸ்வரத்துக்கு கொடிச்சீலை வழங்கப்பட்டநிலையில் யுத்த காலத்தில் அந்த முறை கைவிடப்பட்டிருந்தது.

# கடுமையான சட்டத்தை உருவாக்குங்கள்

பாடசாலை பாடத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பெற்றோர்-பிள்ளை உறவுகள் குறித்தும், வீட்டுச்சூழலில் மனநலம் தொடர்பான புதிய கருத்தாடல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

சிறுவர் சந்ததியினரைப் பாதுகாப்பதற்கு கடுமையான சட்டங்களைக் கொண்டுவரும் அதேவேளையில், பிள்ளைகளின் மனநிலையைப் புரிந்துகொண்டு பரந்த மனப்பான்மை கொண்ட பிள்ளையை உருவாக்குவதற்கும் சமூகத்தின் மனப்பாங்கை வளர்ப்பதற்கு அரச மற்றும் தனியார் நிறுவன மட்டத்தில் தனியான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார்.

## பால்மா, சீனி விலைகள் குறைத்தன




400 கிராம் பால் மாப் பொதியின் விலை 60 ரூபாயாலும் ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் விலையை 6 ரூபாயாலும் குறைப்பதற்கு சதொச தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க, 249 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனியின் விலை 6 ரூபாயால் குறைக்கப்பட்டு 243 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், 1140 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 400 கிராம் பால் மாப் பொதி 60 ரூபாயால் குறைக்கப்பட்டு 1,080 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக சதொச குறிப்பிட்டுள்ளது.

# இப்ராஹிம் உட்பட 3பேரின் ஆட்சேபனைகள் நிராகரிப்பு

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முன்னெடுக்க முடியாது என்றும் அதி குற்றப்பத்திரிகையின் சட்டப்பூர்வ தன்மை செல்லுபடியாகாது என்றும் அதனை நிராகரித்து பிரதிவாதிகளை விடுவிக்குமாறும் அடிப்படை ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட அதிகுற்றப்பத்திரிகையின் செல்லுபடியை சரிபார்க்கும் அதிகாரம் தனது நீதிமன்றத்துக்கு இல்லை என்பதால், அடிப்படை ஆட்சேபனையை நிராகரிப்பதாக அறிவித்த நீதிபதி, சாட்சிய விசாரணையை ஜூன் 6ஆம் திகதி நடத்துவதற்கு திகதி குறித்தார்.

மொஹமட் இப்ராஹிம் மற்றும் மொஹமட் ஹிஸாஸ் ஆகிய பிரதிவாதிளை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, கடந்த 2022ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி பிணையில் விடுலை செய்தார்.

மொஹமட் இப்ராஹிம் என்ற பிரதிவாதி, கொழும்பு சினமன் கிராண்ட் மற்றும் ஷங்ரில்லா ஆகிய சொகுசு ஹோட்டல்களில் தாக்குதல் நடத்திய மொஹமட் இல்ஹாம் மற்றும் மொஹமட் இன்ஸாப் ஆகியோரின் தந்தையாவார்.

ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படவுள்ளமை குறித்த தகவலை முன்கூட்டியே அறிந்திருந்தும் பொலிஸாரிடம் அதை மறைத்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் மொஹமட் இப்ராஹிம் உள்ளிட்ட மூவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூவருக்கு விளக்கமறியல்: ஒருவருக்கு பிணை

அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, ஹோட்டல் உரிமையாளரின் மனைவியை பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்ட நீதவான், ஏனைய மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

களுத்துறை, காலி வீதியின் பிரதான வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் பின்புறம் உள்ள

தண்டவாளத்துக்கு அருகில் இருந்து கடந்த 6ஆம் திகதி குறித்த சிறுமியின் சடலம் மீட்கப்பட்டமை குறித்து பிரதான சந்தேக நபர், செவ்வாய்க்கிழமை (09) கைது செய்யப்பட்டிருந்தார்.

இளம் தம்பதியினர், இளைஞர் மற்றும் குறித்த சிறுமி ஆகியோர் சனிக்கிழமை (06) மாலை குறித்த ஹோட்டலில் இரு அறைகளில் தங்கினர்.

சிறுமியுடன் வந்த இளைஞரும் தம்பதியினரும் சில மணித்தியாலங்களுக்கு பின்னர் ஹோட்டலில் இருந்து வெளியேறியுள்ள நிலையில், ரயில் கடவையில் இருந்து சிறுமியின் நிர்வாண சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, இளம் தம்பதியினரைக் கைது செய்ய பொலிஸார், பிரதான சந்தேகநபர் மற்றும் ஹோட்டல் உரிமையாளரின் மனைவி ஆகியோரைக் கைது செய்திருந்தனர்.

# எனக்கு அந்த...

சுமார் 120 குடும்பங்களுக்கு காணி உறுதி பத்திரம் வழங்கும் நிகழ்வு சங்கத்தின் தலைவரும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ மற்றும் வடிவேல் சுரேஷின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த வடிவேல் சுரேஷ், "பெருந்தோட்ட தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். என்னுடைய மக்களுக்கு நன்மை கிடைக்கும் அனைத்து வேலை திட்டங்களிலும் நான் முன்னின்று செயல்படுவேன். கட்சிகளோ, சின்னங்களோ, வர்ணங்களோ எனக்குத் தேவையில்லை" என்றார்.

"என்னுடைய மக்களின் அபிவிருத்தி செயல்பாடுகளே எனக்கு முக்கியம். எதிர்வரும் காலங்களில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் காணி பகிர்வு தொடர்பாக இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் என்ற ரீதியில் தலைவரும் நானும் முன்னின்று செயல்படுவோம்" என்றார்.

# 100 நாட்களுக்கு மூடப்படும்

டுவிட்டரில் திங்கட்கிழமை (15) பதிவொன்றை இட்ட அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்திருந்தார்.

தற்போது 30ஆவது நிலக்கரி சரக்கு நுரைச்சோலையில் இறக்கப்படும் நிலையில், இந்தப் பருவத்துக்கான இலங்கை மின்சார சபையின் முழு நிலக்கரித் தேவையும் பூர்த்தியாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நிலக்கரி தட்டுப்பாடு காரணமாக மின்வெட்டு அமுலாகலாம் என்று இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊடக அறிக்கைகள் ஊகித்ததாக குறிப்பிட்ட அமைச்சர், அவ்வாறு மின்வெட்டு ஏற்படாது என்றார்.

# மஹிந்த பலவந்தமாக பிரதமர் பதவியை ஏற்கார்

மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமர் பதவிக்கு நியமிக்கும் முயற்சியின் அடிப்படையில், கொழும்பு நகர் முழுவதும் இராணுவத்தினர் களமிறங்கப்பட்டனர் என்ற பிரசாரம் முழுமையாக பொய்யானது.

அத்துடன் அடிப்படையற்ற கதையாகும் என்று தெரிவித்த காரியவசம், அரசியல் ரீதியில் பின்னடைவை சந்தித்த நபரே இவ்வாறான கதைகளை அவிழ்த்துவிட்டிருக்க வேண்டும் என்றார்.

எவ்விதமான அடிப்படையும் இன்றி ஊடகங்களுக்கு பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்தல் மற்றும் மக்களை ஏமாற்ற முயலுதல் அவர்களின் இயலாமையை மூடிமறைப்பதற்கு எடுக்கப்பட்ட செயற்பாடாகும் என்று குறிப்பிட்டார்.

அதனூடாக ஊடகத்தின் தேவையை பெற்றுக்கொள்வதற்கு முயல்கின்றனர் என்றும் மஹிந்த ராஜபக்ஷ என்பவர் சுதந்திரத்துக்குப் பின்னர் உருவான சிரேஷ்ட தலைவராவார் என்று தெரிவித்தார்.மஹிந்த ராஜபக்ஷ என்பவரை நான்கு ஜனாதிபதிகளால் நீக்கமுடியவில்லை எனவும் 30 வருட யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவந்த தலைவர் என்பதுடன், நாட்டு மக்களுக்காக அதிகாரத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய பாக்கியமிக்க தலைவர் என்றும் தெரிவித்தார்.

# சீரற்ற வானிலையால்...

தென் மாகாணத்தில் அதிக சேதங்கள் பதிவாகியுள்ளதாகவும் காலி, திருகோணமலை, புத்தளம், குருநாகல், கேகாலை, இரத்தினபுரி மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நிலையம் தெரிவித்துள்ளது.மேலும், அனர்த்த பகுதிகளில் வசிப்பவர்கள் தங்கள் அலைபேசிகளை எப்போதும் முழுமையாக மின்னேற்றம் (சார்ஜ்) செய்து வைத்திருக்குமாறும் நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார். பேரழிவு ஏற்படுமாயின் செயலில் உள்ள அலைபேசி இணைப்பு மூலம் உதவிகளை பெறுவதற்கு இலகுவாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும், சீரற்ற வானிலையினால் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் தொடர்பில் மக்கள் அவதானமாக செயற்படுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் காரணமாக தெனியாய மற்றும் முலட்டியான கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு திங்கட்கிழமை (15) விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

# அரசாங்கங்களை கவிழ்க்க...

காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுடன் காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (15) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, "இன்று அரசு நிறுவனங்களில் நடக்கக்கூடாதவைகள் நடக்கின்றன. அவை முடிந்தவரை குறைக்கப்பட வேண்டும். பந்தை வேறொருவருக்கு அனுப்புவது சரியில்லை. கார் கொடுத்தால், சம்பளம் வாங்கினால், அலவன்ஸ் கிடைத்தால் செலவழிக்கப்படும் பணம் மக்கள் பணம். எனவே, கடன் வாங்காமல், கிடைக்கும் பணத்திற்காக உழைக்க வேண்டும்.

புதிய வழியில் சிந்தித்து, புதிய வழியில் செயல்பட்டால், எங்களால் நீண்ட பயணம் செல்ல முடியும். நாட்டின் தற்போதைய நிலையை என்னை விட அரசாங்க அதிகாரிகளாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். பாரம்பரிய நிறுவனமாக முன்னேறாமல், புதிய வழியில் சிந்தித்து வருமானம் ஈட்ட வேண்டும்.

அந்தப் பயணத்தில், நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் வேலையைப் பாதுகாப்பதுதான் முதல் விஷயம். அதுதான் இப்போது நமக்கு இருக்கும் மிகப்பெரிய சவால். எனக்கு கீழ் உள்ள பல அரசு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

நான் இந்த அமைச்சுப் பொறுப்பை ஏற்றது முதல் முடியாதவர்கள்தான் என்னிடம் வந்துள்ளனர். தவறு செய்பவர்கள் எப்படியாவது அதிகாரிகள் மூலம் தங்கள் வேலையை செய்து கொள்கிறார்கள்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையானது ஒரு புதிய முறையான பிரித்தெடுக்கும் முறையைக் கொண்டிருந்தது. நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. நட்டஈடு வழங்க முடியாவிட்டால் அவரை பதவியிலிருந்து விலக்குங்கள் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனம் மீதும் பல முறைப்பாடுகள் உள்ளன. உண்மையோ பொய்யோ, அதனால்தான் மக்களுக்கு வேலையைச் செய்ய முடியாது என்று கூறுகிறார்கள். நிறுவனம் நல்லதோ கெட்டதோ அது நிறுவனத்தின் தலைவரைப் பொறுத்தது, நான் அல்ல. வேலை செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவது நிறுவனத்தின் தலைவரின் பொறுப்பாகும். மாற்ற வேண்டிய இடங்களை மாற்றுவது அவசியம். சொந்தக் கட்சியில் உறுப்பினராக இருப்பதில் எனக்கு கவலையில்லை.

அரசு நிறுவனங்களிலும் தலையை குழப்பியவர்கள் சிலர். இதுபோன்ற விஷயங்களை அனுமதிக்காதீர்கள். போராளிகளுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. போராடுபவர்கள் நாட்டைக் கட்டியெழுப்ப வருகிறார்கள் ஆனால் குழந்தைப் பேறு கிடைக்காமல் கவனமாக இருக்கத் தெரியவில்லை. இன்று அவர்கள் குழந்தைகளை ரயில்களில் விட்டு விட்டர்கள்.

மக்களுக்கு தங்கள் அரசியல் கருத்தை மதிக்கலாம். ஒரு நாட்டை அழிப்பதற்கு கேவலமானவர்களை அனுமதிக்க முடியாது. அரசாங்கங்களை கவிழ்க்கலாம். அது மனித உரிமை. ஆனால் அரசை கவிழ்க்க முயல்வது பயங்கரவாத செயல் என்று அர்த்தம்.

தன்னார்வத்துடன் ஒரு நிறுவனத்தை எவ்வாறு வளர்ப்பது என்பது நிறுவனத்தின் நபர்களின் பொறுப்பு. இரண்டு அல்லது மூன்று வருடங்கள் வருகிறோம், மீண்டும் மாறுகிறோம், வேறு யாரோ இங்கே வருகிறார்கள். நிறுவனத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நிறுவனத்தின் ஊழியர்களிடம் உள்ளது.

சட்டத்தில் சிக்கித் தவறிழைக்காமல் மக்களுக்கு உதவுங்கள். நேர்மையுடன் உதவுவதன் மூலம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுங்கள். அப்போது மக்கள் என்னிடம் வர வேண்டிய அவசியமில்லை" என்றார்.

யாழில் 'வட்ஸ் அப் குரூப்' ஊடாக

# சிறுவர்களையும் உள்ளடக்கிய வன்முறைக் கும்பல்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் 'வட்ஸ் அப் குரூப்' ஊடாக ஒன்றிணைந்திருந்த வன்முறை கும்பலைச் சேர்ந்த இருவர், யாழ்ப்பாண பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை (14) கைது செய்யப்பட்டனர்.

15 வயது சிறுவர்கள் முதல் 23 வயது இளைஞர்கள் வரையிலான சுமார் 20க்கும் மேற்பட்டோர் ஒன்றிணைந்து, வன்முறை கும்பல் ஒன்றாகத் தம்மை சமூக ஊடகங்கள் ஊடாக அடையாளப்படுத்தி வந்துள்ளனர்.

குறிப்பாக, 'டிஃடோக்' செயலியில் வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடனும், நவீன ரக மோட்டார் சைக்கிள்களுடனும் வீடியோக்கள், படங்கள் என்பவற்றை பதிவேற்றி, யாழில் இயங்கும் மற்றைய வன்முறை கும்பல்களை சேர்ந்தவர்களுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் காணொளிகளை பதிவேற்றி வந்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, விசாரணைகளை முன்னெடுத்து, காணொளிகளில் உள்ளவர்களை அடையாளம் கண்டுள்ளனர். அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்த வேளை, அரியாலை, பூம்புகார் பகுதியில் மறைந்திருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், தாம் 'வட்ஸ் அப்' ஊடாகவே தொடர்புகளை பேணுவதாகவும், இதுவரையில் எந்த வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபடவில்லை எனவும், பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய தாம், கல்வியைத் தொடர முடியாது, வேலைகளுக்கும் செல்லாது வீட்டில் தங்கி வாழ்கிறோம் எனவும் தெரிவித்துள்னர்.

குறித்த கும்பலுடன் தொடர்புடைய 20க்கும் மேற்பட்டவர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, யாழில் இயங்கும் வன்முறை கும்பல்கள், வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றி வருவதால், அவற்றைப் பார்க்கும் வெளிநாட்டில் உள்ள நபர்கள், யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுடன் ஏற்படும் முரண்பாடுகளுக்கு, இந்தக் குழுக்களைக் கூலிக்கு அமர்த்தி, வன்முறைகளில் ஈடுபடுத்துவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில்

# தொல்பொருள் திணைக்களம் நிலஅளவைக்கு முஸ்தீபு

## தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

■ க. அகரன்

கிளிநொச்சி, உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நில அளவை செய்யப்பட உள்ளதாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இதைத் தடுத்துநிறுத்துமாறு கோரி, ஆலயத்தின் அறங்காவலர் சபையினர், வவுனியாவில் உள்ள ஜனாதிபதி உப செயலகத்துக்கு நேற்று (15) விஜயம் செய்து, ஜனாதிபதிக்கு அனுப்பும் வண்ணம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

அதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது, அவர்கள் தெரிவித்ததாவது; எமது ஆலயம் அமைந்துள்ள காணியை எல்லைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை எதிர்வரும் வியாழக்கிழமை (18) மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்செயற்பாட்டுக்கு முழுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்கிறோம்.

ஏற்கெனவே, 2021.03.22ஆம் திகதி அளவீட்டுப்பணிகளை மேற்கொள்வதற்காக தொல்பொருள் திணைக்களத்தினர் வருகைதந்தபோது, மக்கள் எதிர்ப்பின் காரணமாக ஆலய வளாகத்துக்குள் உள்நுழையமுடியாதவாறு வெளியேற்றப்பட்டனர்.

சதுர ஆவுடையார் கொண்ட சிவலிங்கத்தை உடைய, இலங்கையில் உள்ள ஒரேயொரு சிவாலயம் என்னும் பெருமையையும், 2,400 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமையையும் கொண்டது இந்த ஆலயம். இதன் பூசை மரபுகளும் வழிபாடுகளும் இயல்பாக நடைபெற்று வரும் சூழலில், தொல்பொருள் திணைக்களத்தின் தலையீட்டை நாமோ எமது மாவட்ட மக்களோ விரும்பவில்லை.

எனவே, ஆலயத்தில் தொல்பொருள திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள அளவீட்டுப் பணிகளையும் அதனோடு தொடர்புடைய அகழ்வுப் பணிகளையும் நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தி, ஆலயத்தின் புனிதத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு குறித்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

# மின் இணைப்பு வழங்க கோரி ஆர்ப்பாட்டம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு, மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாவிலங்கத்துறை பிரதேசத்தில் வசிக்கும் 47 குடும்பங்கள் தமது வீடுகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்க கோரி, திங்கட்கிழமை (15) இலங்கை மின்சார சபை காத்தான்குடி அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிய மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்து, பல மாதங்களாகியும் இன்னும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, இலங்கை மின்சார சபையின் காத்தான்குடி அலுவலக மின் அத்தியட்சகர் கனகசபை சிவேந்தரனிடம் கேட்ட போது, இங்கு வசிக்கும் குடும்பங்கள் புதிய மின் இணைப்புக் கோரிய விண்ணப்பங்களின் பிரகாரம் அதற்காக மதிப்பீடுகள் செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. ஆனால், அது நிராகரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், குறித்த வீடுகள் அமையப் பெற்றுள்ள பகுதிக்கு மின் தூண்கள் இடப்பட்டு மின் கம்பிகள் போடப்படல் வேண்டும். இதற்கான பணம், இப்போது இலங்கை மின்சார சபையிடம் இல்லை.

இந்த நிலையில், இதற்கான பொறுப்பை இந்தக் குடும்பங்கள் ஏற்குமாயின், புதிய இணைப்புகளை உடனடியாக வழங்க முடியும். இதற்காக ஒவ்வொரு குடும்பமும் ஒரு இலட்சம் ரூபாய்க்கும் மேல் செலுத்த வேண்டிவரும்.

எனினும் இது தொடர்பாக, மேலதிகாரிகள் மற்றும் மாகாண மட்ட அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளோம். அந்த மக்களுக்கு மின்சாரம் கிடைப்பதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம் எனத் தெரிவித்தார்.



கே.கே.எஸ் சீமெந்து ஆலையில்

# இரும்புகள் திருட்டு

■ எம். றொசாந்த்

காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள சீமெந்து ஆலையின் இரும்புகளை திருடிய குற்றச்சாட்டில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை யுத்தம் காரணமாக கைவிடப்பட்ட நிலையில், கடந்த 33 வருடங்களுக்கு மேலாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் காணப்படுகின்றது.

இந்நிலையில் மீளவும் தொழிற்சாலையை புனரமைத்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் நிலையில், 2013ஆம் ஆண்டு தொழிற்சாலையில் இருந்த பாரிய இயந்திரங்களை வெட்டி, அவற்றின் பாகங்களை இரும்புக்காக தென்இலங்கையை சேர்ந்த நபர்கள் எடுத்துச் சென்றனர்.

அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், இராணுவத்தினர் சீமெந்து தொழிற்சாலையின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தினர்.

இந்நிலையில், தற்போது மீண்டும் இரும்புகளை திருடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை (14) இரும்புகளை வெட்டி வாகனத்தில் ஏற்றி செல்ல முற்பட்ட வேளை, காங்கேசன்துறை பொலிஸாரால் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து சுமார் 780 கிலோ கிராம் இரும்பை மீட்டு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாக்குமூலம் பெற அழைத்துவரப்பட்ட

# பதுளை பெண் மரணம்

இராஜகிரிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வீட்டுப் பணிப்பெண்ணாக பணியாற்றிய பெண்ணொருவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக அப்பெண்ணை அழைத்துவந்தபோது அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் பிரபல தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளரும் வர்த்தக பிரமுகருமான சுதர்மா நெத்திகுமாரவின் வீட்டிலேயே பணிப்பெண்ணாகப் பணிபுரிந்து வந்துள்ளார்.

அந்த வீட்டில் திருடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், வீட்டின் உரிமையாளரால் வெலிகட பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவந்தபோது, திடீரென சுகவீனமடைந்த அப்பெண், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதன்பின்னர் மரணமடைந்தார். பதுளை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஆர். செல்வராசா குமார் (வயது 45) என்ற பெண்ணே மரணமடைந்துள்ளார். மூச்சுத்திணறல் காரணமாகவே அப்பெண் உயிரிழந்துள்ளார் என்று அறியமுடிகின்றது. எனினும், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்துகொண்டிருந்த போதே அப்பெண்ணுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டிருந்ததாக அறியமுடிகின்றது.



# சிலை திருடிய இராணுவ வீரர் கைது

■ க. அகரன்

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள கோவிலில் இருந்து பித்தளை நடராஜர் சிலையை திருடியதாக, சந்தேகத்தின் பேரில் இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் (14) கைது செய்யப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கராயன்குளம் இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரர், மாதாந்த விடுமுறைக்காக வீட்டுக்குத் திரும்பிய போதே, இந்தக் கொள்ளையில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கோவிலில் இருந்த விக்கிரகத்தை திருடி, பையில் வைத்துக்கொண்டிருந்த போது, ஓட்டோ சாரதிகளால் பிடிக்கப்பட்டு, வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். திருடப்பட்ட சிலையின் பெறுமதி சுமார் 50,000 ரூபாய்



வரையிலானது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# மூதூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

■ தீஷான் அஹமட்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், சேனையூர் பிள்ளையார் கோவில் வளாகத்தில் , மே18 முள்ளிவாய்க்கால் சம்பவத்தின் நினைவையொட்டி, திங்கட்கிழமை (15) முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இந்நிகழ்வை சேனையூர் பிரதேச மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது முள்ளிவாய்க்கால் சம்பவத்தில் உயிர் நீத்த உறவுகளுக்காக தீபமேற்றப்பட்டு மௌன பிரார்த்தனையும் இடம்பெற்றது.



மடு பிரதேச செயலகத்தில்

# சூழல் பாதுகாப்பு கருத்தமர்வு

■ ரொசேரியன் லெம்பட்

அரச உத்தியோகத்தர்களுக்கான சூழல் பாதுகாப்புக் கருத்தமர்வு, மடு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று (15) நடைபெற்றது.

வாழ்வுதயம் சூழல் பாதுகாப்பு பிரிவால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில், மடு பிரதேச செயலாளர் பீட் நிஜா கரன், அலுவலக உத்தியோகத்தர் அ.செ டல்மேடா, கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என 40 வரையான உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

கறிராஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை செ. அன்ரன் அடிகளார் 'இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள்' பற்றி உரையாற்றினார். மன்னார் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி அருள்மலர் அந்தோனிப்பிள்ளை 'உலக வெப்பமாதல்; கழிவு முகாமைத்துவம்' தொடர்பாக கருத்துரை வழங்கினார்.

# மாணவர்களுக்கு வளப்பகிர்வு

■ நீலமேகம் பிரசாந்த்

கொட்டகலை பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சுப்பையா செல்வம் நிதியத்தின் ஊடாக, கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அதன் தலைவர் எஸ்.பத்மராஜா தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில், கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவர் புஸ்பா விஸ்வநாதன், கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தின் தலைவர் வடிவேல் உட்பட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# அகில இலங்கை சமாதான நீதவான்

■ ரொசேரியன் லெம்பட்

மன்னார், சின்னக்கடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் அமுதன் டானியல், அகில இலங்கை சமாதான நீதவானாக திங்கட்கிழமை (15) மன்னார் நீதவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றிவரும் ஜோசப்



அமுதன் டானியல், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை உள்ளவர் என்பதுடன் ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா , கணினி அறிவியலில் இளமாணி (B.Sc), பட்டப் பின் பட்டயக் கல்வி (PGDCA), சமூகவியலில் முதுமாணி (MA) உட்பட 12 டிப்ளோமா பட்டங்களையும் பெற்றுள்ளார்.

சமூக அக்கறையுடன் செயற்பட்டு வரும் இவர், 'விட்டு விடுதலை காண்', 'அக்குரோணி', 'அன்னயாவினும்', 'ஒற்றை யானை' எனும் நான்கு நூல்களை வெளியிட்டுள்ளதுடன் சிறுகதை துறைக்கான வடமாகாண இளங்கலைஞர் விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

# உணவுப் பற்றாக்குறையை ஒழிக்க தேசிய வேலைத்திட்டம் தேவை

மேலோட்டமாக பார்க்குமிடத்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் மூவேளை மட்டுமன்றி, அதற்கு மேலும் சாப்பிடுகின்றனர் என்றுதான் தென்படும். எனினும், பலரும் நாளொன்றுக்குத் தேவையான உணவையும், போஷாக்கு நிறைந்த, சத்தான உணவையும் உட்கொள்வதில்லை என்பதே யதார்த்தமாகும்.

கொரோனா காலத்தில் தங்களுக்குத் தேவையான மரக்கறிகளை தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும் நோக்கில், வீட்டுத்தோட்டங்களை அமைத்தனர். அந்த முறைமையை சிலர் இன்னும் கடைப்பிடிக்கின்றனர். ஏனையோர் கைவிட்டுவிட்டனர்.

இறைச்சி, மீன், முட்டை மட்டுமன்றி மரக்கறிகளின் விலைகளும் எகிறி நிற்கின்றன. எனினும், தங்களுடைய பிள்ளைகளுக்குத் தேவையான உணவை சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர், எப்படியாவது வாங்கிக்கொடுத்து நோய்நொடியின்றி வாழ வழிசமைத்து கொடுகின்றனர்.

இன்னும் சிலர், கிடைக்கக்கூடிய சத்துணவை வாங்கிக்கொடுக்காது, இல்லையேல் வீட்டுத்தோட்டங்களில் பயிரிடக்கூடிய மரக்கறிகளை பயிரிட்டு வீட்டு சமையலுக்கு எடுத்துக்கொள்ளாது, கிடைப்பதை சமைத்து சாப்பிட்டுவிட்டு, இல்லையேல் அரைவயிறும் கால்வயிறுமாக கிடந்து, நோய் நொடியென அவதிப்பட்டு வைத்தியசாலைக்கு அலைந்துகொண்டிருக்கின்றனர்.

இறைச்சி வகைகளில் கிடைக்கும் போஷாக்கை விடவும் மரக்கறிகளில் இருந்து கிடைக்கும் சத்து அதிகமாகும் என்பது மட்டுமன்றி செரிமானமும் முழுமையாக அடைந்து, சத்துகள் முழுமையாக அகத்துறிஞ்சப்பட்டு விடுகின்றன.

சில ஹோட்டல்கள், உணவகங்களுக்குச் சென்று பார்த்தோமெனில், சாப்பிட்டதை விடவும் குப்பை கூடைகளில் வீசப்பட்டிருக்கும் உணவுகளின் அளவு அதிகமாகும். தங்களுக்குத் தேவையானதை மட்டுமே வாங்கி உண்ணாமல், பலரும் உணவுகளை வீணாக்கிவிடுவர்.

நமது நாட்டை பொறுத்தவரையில் பாடசாலை மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு அதாவது, 14 இலட்சத்துக்கும் அண்மித்த எண்ணிக்கையிலான மாணவர்கள் போதியளவில் காலை உணவை உண்பதில்லை அல்லது எந்தவோர் உணவையும் உட்கொள்வதில்லை என்பது வைத்திய பரிசோதனை தகவல்களின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.


இது பொருளாதார பாதுகாப்பின்மையால் ஏற்பட்டிருக்கும் அழுத்தமாகுமென பாராளுமன்ற உறுப்பினரும் துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவருமான காமினி வலேபொட தெரிவித்துள்ளார். காலை உணவைத் தவிர்ப்பது குழந்தைகளின் மூளை மற்றும் உடல் வளர்ச்சியில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக சோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணவீக்கம் காரணமாக மக்கள் தங்களுடைய வருமானத்தில் 75 சதவீதத்தை உணவுக்கே செலவுசெய்து விடுகின்றனர். 2019ஆம் ஆண்டு மக்கள் தங்களுடைய வருமானத்தில் 32 சதவீதத்தை மட்டுமே, உணவுக்காக செலவழித்து இருந்தனர்.

எனினும், மக்களின் மந்தபோஷனை கடந்த 10 வருடங்களாக 20 சதவீதத்துக்கு அதிகரித்துள்ளது. இந்நிலையில், சனத்தொகையில் 80 சதவீதமான மக்களுக்கு போஷாக்கான உணவு கிடைப்பதில்லை என்றும் காமினி வலேபொட எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

அவருடைய கூற்றை கவனத்தில் எடுத்து, மக்களின் நிலைமையை கவனத்தில் கொண்டு, உணவுப் பாதுகாப்பு தேசிய வேலைத்திட்டமே காலத்தின் தேவையாகுமென வலியுறுத்துகின்றோம்.






## வாழ்வியல் தரிசனம்

பாடசாலை மாணவர்களை கல்வியில் விருப்பம் கொள்ள வைப்பதற்கு ஆசிரியர்களுக்கு, மாணவர்களைத் தங்கள் வசம் வைத்திருக்கும் திறன் முக்கியமானது.

மாணவர்களில் அநேகர், ஆசிரியர்கள் தங்களுடன் அன்பாகப் பேசுவதில்லை; சகஜமாகப் பழகுவதில்லை என எண்ணுகின்றார்கள். இதில் உண்மைகளும் இல்லாமல் இல்லை. ஆனால், பெரும்பாலும் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான புரிந்துணர்வு இன்மையே பிரதான காரணமாக இருக்கலாம். இதை அறிவால் போக்கிக் கொள்ளலாம்.

படிப்பதில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஊட்ட வேண்டும். மாணவர்களை அடக்கி, ஒடுக்கி கல்வியூட்டினால், அவர்களுக்கு கல்வி கற்பதில் விருப்பமே வராது. மேலும், சில ஆசிரியர்களைக் கண்டால் மாணவர்கள் அஞ்சி நடுங்குவதுண்டு. இதனால், கல்வி என்ற பயிர் நல்ல விளைச்சலைத் தராது.

ஆனால், ஆசிரியர்கள் சொல்லும் அறிவுரைகளைக் கேட்காது, தமது விருப்பப்படி, தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளும் மாணவர்களும் உண்டு. ஒழுக்கம் என்றால் என்ன எனத் தெரியாத பிள்ளைகளுக்கு அமைதியான வழியில் புத்திமதி சொல்வது பெரும் கலை; அதுவே, ஓர் ஆசிரியரை நல்லாசிரியர் ஆக்குகின்றது.

சுற்றாடலின் குறைபாடுகளால் மாணவர்கள் ஈர்க்கப்படலாம். ஒழுக்கம் இன்றிக் கல்வி கற்பது, சிரமமானது. பொறுமை அவசியம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முஸ்லிம் தரப்புடனும் பேசுவது கட்டாயம்

மொஹமட் பாதுஷா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோர், நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஆர்வம் கொண்டுள்ளதான தோற்றப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்ற நிலையில், அரசாங்கத்தின் இன்னுமொரு தரப்பினர் அதைச் சீர்குலைக்கும் விதத்தில் செயற்பட்டு வருகின்றனர். இதற்கு நல்ல உதாரணமாக, சரத் வீரசேகர போன்ற அரசியல்வாதிகளைச் சுட்டிக்காட்டலாம்.

இந்தப் பின்னணியிலேயே, அரசாங்கத்துக்கும் தமிழ்த் தரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் பல தடவை இதுபோன்ற பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று, தீர்க்கமான முடிவொன்றை எட்டாமலேயே நின்றுபோன விவகாரங்களைத்தான் மீண்டும் புதிய கோணத்தில், புதிய மேசையில் பேசத் தொடங்கி இருக்கின்றார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவதற்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே ஆரம்பத்தில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் எம்.பிக்களையும் உள்ளடக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தரப்பு வலுவாக முன்வைத்தது.

இதற்கு அடிப்படைக் காரணம், இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளடங்கலாக இப்பேச்சுவார்த்தையில் பேசப்படுகின்ற விடயதானங்கள் வடக்கு, கிழக்கு என்ற இரு மாகாணங்களையும் உள்ளடக்கியது என்பதாகும். எனவே, இதையடுத்து கிழக்கு மாகாண தமிழ் எம்.பிக்களும் சந்திப்பில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், வடக்கு, கிழக்கு மாகாணங்களை தாயகமாகக் கொண்ட இன்னுமோர் இனக் குழுமமும் இனப்பிரச்சினை மற்றும் இன்று பேசப்படுகின்ற அனைத்து விடயங்களுடனும் தொடர்புபட்ட தனிச் சமூகமுமான முஸ்லிம்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை என்பதாகும்.

போர் நிறுத்தப் பேச்சுகள், சமாதானப் பேச்சுகள், நல்லிணக்க உரையாடல்கள், தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள், ஆணைக்குழுக்கள், விசாரணைக்குழுக்கள் என்று இதுவரை எத்தனையோ விடயங்கள் நடந்தேறிவிட்டன. ஆனால், அநேக பேச்சுகளால், விசாரணைக் குழுக்களால் கிடைத்த பலன் என்று ஒன்றுமில்லை.

அரசாங்கங்களும் சர்வதேசமும் இதனால் ஏதோ ஓர் அனுகூலத்தை அடைந்து கொண்டன. தமிழ் அரசியல்வாதிகள், தாங்கள் சமூகத்துக்காகப் போராடுவதாக காண்பித்ததன் மூலம், அரசியல் ரீதியான இலாபத்தை, தேர்தல் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஆனால், தமிழ் மக்களுக்கு நேரமும் காலமும் வீணடிக்கப்பட்ட அளவுக்கு, அவர்களது அபிலாஷைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் கசப்பான உண்மையாகும்.

நாம் என்னதான் சொன்னாலும், இலங்கை என்பது சிங்களப் பௌத்த பெரும்பான்மையைக் கொண்ட ஒரு பல்லின நாடு என்ற அடிப்படை விடயத்தை மறந்து விடக் கூடாது. எனவே, இங்கு சில வகையான தீர்வுப் பொதிகள் நடைமுறைச் சாத்தியமாவது, அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஆனால், தமிழ்த் தரப்பு அவ்வாறான நிலைப்பாட்டில், ஓர் இம்மியளவு நெகிழ்வுத் தன்மையையே இதுவரை வெளிக்காட்டியுள்ளது என்பது கவனிப்புக்குரியது.

மறுபுறத்தில், ரணில் விக்கிரமசிங்க போன்ற சில பெரும்பான்மையினத் தலைவர்கள், தீர்வு விடயத்தில் பிடிவாதமின்றி நடந்து கொண்டாலும் கூட, பொதுவாக பெருந்தேசிய அரசியல் என்பது, உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றின் ஊடாக, தமிழ்த் தரப்பு கோருகின்ற ‘எல்லாவற்றையும்’ முழுமையாகத் தங்கத் தட்டில் வைத்து வழங்கப் தயாரில்லை. எனவேதான், இப்பிரச்சினை இன்னும் பிச்சைக்காரனின் புண்ணைப்போலவே இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கும் போது, தற்போது நடைபெறும் பேச்சுகளும் எவ்வளவு தூரம் செல்லும், அதன் விளைபயன் என்னவாக இருக்கும் என்பதெல்லாம் நடக்கும் வரை நிச்சயமற்றதாகவே தெரிகின்றது. அதையெல்லாம் தாண்டி, இச்சந்திப்பு ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் நடைபெறுவதால், பல வகைகளில் முக்கியமானது என்பதை மறுக்கவியலாது.

எனவே, இந்தச் சந்திப்புகளுக்கு இவ்விவகாரங்களுடன் தொடர்புபட்ட முஸ்லிம் தரப்பும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். கலந்துரையாடப்படுகின்ற விடயதானங்கள் தொடர்பில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் என்ன நிலைப்பாட்டில் உள்ளனர்? அவர்களது அபிலாஷைகள் என்ன என்பதும் சமகாலத்தில் உரையாடப்பட வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தரப்புக்கும் இடையிலான பேச்சுகள், வடக்கையும் கிழக்கையும் உள்ளடக்கியதான இனப்பிரச்சினை தீர்வை நோக்கிய ஒரு முயற்சியாகும். அத்துடன் அதிகாரப் பகிர்வு, காணி விவகாரம், காணாமல் போனோர் விகாரம், கைதிகள் விடயம், நல்லிணக்கம் என்பன பற்றியும் இக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இனப்பிரச்சினை என்பது அரசாங்கம் மற்றும் படைகளுடனும், தமிழ் ஆயுதக்குழுக்கள் மற்றும் தமிழ் மக்களுடனும் தொடர்புபட்டதாக நோக்கப்பட்டாலும், உண்மையில் அது வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள் மீதும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. அநாவசியமான முறையில் முஸ்லிம்கள் இருதலைக் கொள்ளியாக நசுக்கப்பட்ட வரலாற்றை மறக்க முடியாது.

எனவே, இப்பேச்சுகளில் பேசப்படுகின்ற 99 சதவீதமான விவகாரங்கள் முஸ்லிம் மக்களுடனும் தொடர்புபட்டது என்பதை முதலில் அனைத்து தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு இணைக்கப்படக் கூடாது என்பது இவ்விரு மாகாணங்களிலும் வாழும் முஸ்லிம்களின் நிலைப்பாடாகும். அதேபோன்று, அதிகாரப் பகிர்வு எப்படியானதாக இருக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு முஸ்லிம் சமூகத்துக்கு உள்ளது.

முஸ்லிம்களுக்கும் இலட்சக் கணக்கான ஹெக்டேயர் காணிகள் பற்றிய பிரச்சினைகள் உள்ளன. யுத்த காலத்தில் கடத்தப்பட்டோர் காணாமல்போனோர் பற்றிய பிரச்சினைகளும், விடுதலைப் புலிகள் மற்றும் ஆயுதம் தரித்த குழுக்கள், படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் கதைகளும் ஏராளம் உள்ளன.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் சமூகமும், முக்கியமாக முஸ்லிம் அரசியல் தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இதற்குத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக, நீதியை நிலைநாட்டுவதற்காக தமிழ்ச் சமூகத்தைப் போன்று தொடராக போராடவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அதாவது, கடைசித் தருணத்தில்தான் பஸ்ஸில் ஏறுகின்றார்கள்; இதன் காரணமாகவே, தமிழர்களுக்கு ஏதாவது தீர்வு கிடைக்கப் போகின்ற தருணத்தில், முஸ்லிம்கள் அதில் பங்கு கேட்கின்றார்கள் அல்லது, குறுக்கே வந்து விடுகின்றார்கள் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆனால், எது எப்படியிருப்பினும் முஸ்லிம்கள் இப்பேச்சுவாrத்தைக்கு அழைக்கப்படாமையை நியாயப்படுத்தி விட முடியாது. அதேபோன்று, (இனவாத சிங்களவர்கள் அன்றி) வடக்கிலும் கிழக்கிலும் யுத்தத்தால் இழப்புகளைச் சந்தித்த அப்பாவிச் சிங்கள மக்களையும் கவனத்தில் கொள்வதே எதிர்காலத்துக்கு நல்லதெனலாம்.

இப்போது, இந்தச் சந்திப்புகளில் முஸ்லிம் தரப்பு உள்வாங்கப்படவில்லை என்ற பத்திரிகை பத்திகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களின் விமர்சனங்கள் எழுந்த பிறகு, முஸ்லிம் எம். பிக்களும் அரசாங்கமும் கண்விழித்திருப்பதாக தெரிகின்றது.

இதில் தமக்கும் அழைப்பு விடுக்கப்பட வேண்டும்; தீர்வுடன் தொடர்புபட்ட விடயங்கள் தம்முடனும் கலந்துரையாடப்பட வேண்டும் என்று முஸ்லிம் எம்.பிக்கள் கோரிக்கைகளை விடுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதையடுத்து விரைவில் அரசாங்கம் முஸ்லிம் தரப்பையும் சந்திக்கும் என்ற செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

நாட்டிலுள்ள தமிழர்களின் பிரச்சினைகளை மட்டுமன்றி, முஸ்லிம்கள், சிங்களவர்கள் மற்றும் மலையக மக்களின் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டும். அதற்கான உரையாடல்களை நடத்தத் தயாராக இருப்பதாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி வருகின்றார்.

எனவே, பல யதார்த்த பூர்வமான காரணங்களின் அடிப்படையில், தமிழ் தரப்பை தனியாகவும் முஸ்லிம் தரப்பை வேறாகவும் சந்திக்க அரசாங்கம் திட்டமிட்டு இருக்கலாம். இருப்பினும், இதற்கு நிறைய காலம் தேவைப்படும். அத்துடன் அரசாங்கம் முஸ்லிம்களின் தலையில் பழியைப் போட்டு, தமிழர்களுக்கு ஏதாவது ஒன்றை மறுக்கவும் செய்யலாம்.

எனவே, ஒரே மேசையில் பேசுவது வாதவிவாதங்களைத் தோற்றுவிக்கும் என்றாலும் ஒரு காத்திரமான உரையாடலாக அதைப் பக்குவமாக கையாளலாம். ஒருவேளை, ஒரே மேசையில் தமிழ் தரப்பையும் முஸ்லிம் தரப்பையும் சந்திப்பது சாத்திமயற்றது என்றாலும் கூட, முஸ்லிம் தரப்புடன் சமகாலத்தில், சமாந்திரமான உரையாடல்கள் ஆரம்பிக்க வேண்டும்.

இது வடக்கு, கிழக்கு மாகாணங்களை அடிப்படையாகக் கொண்ட விவகாரம் என்பதால், முஸ்லிம் தரப்பு என்று சொல்லும் போது இவ்விரு மாகாணங்களிலும் உள்ள முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்கள், எம்.பிக்கள் கட்டாயமாக உள்வாங்கப்பட வேண்டும். மாகாண சபை அரசியலில் முக்கிய வகிபங்கை கொண்டிருந்தவர்களின் அபிப்பிராயங்களும் பெறப்படலாம்.

இங்கு ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். அதாவது, இப்போது முஸ்லிம் கட்சித் தலைவராகவோ அல்லது எம்.பியாகவோ இருக்கின்ற பலருக்கு புரையோடிப்போன பிரச்சினைகள் பற்றி எதுவுமே தெரியாது. முறையான ஆவணங்களும் தரவுகளும் இல்லை.

இனப்பிரச்சினை என்பது பல தசாப்த கால வரலாற்றுடன் தொடர்புபட்டது. ஆகவே, புதுமுக எம்.பிக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இதன் ஆழ அகலங்களும் வரலாற்றுச் சம்பவங்களும் தெரியாது.

எனவே, முஸ்லிம் தலைவர்கள் மற்றும் எம்.பிக்களை மட்டும்தான் கூப்பிடுவோம் என்ற கொள்கையை தளர்த்தி, தற்சமயம் பிரதிநிதித்துவ அதிகாரத்தில் இல்லாத வடக்கு, கிழக்கைச் சேர்ந்த விடயமறிந்த முஸ்லிம் அரசியல்வாதிகளையும் இந்தப் பேச்சுக்கு அழைப்பது காத்திரமானதாக அமையும். தமிழ் தரப்பிலும் ஒய்வுநிலை அரசியல்வாதிகள் உள்வாங்கப்படுவது அவசியமாகும்.

அரசாங்கமும் தமிழ்த் தரப்பும் முஸ்லிம் தரப்பும் இதய சுத்தியுடன் பேச வேண்டும். பெரிய தீர்வுகளைப் பற்றிப் பேசிப் பேசியே காலத்தை வீணடிக்காமல், கிடைக்கக் கூடிய சிறிய தீர்வுகளையாவது சாத்தியமாக்கிக் கொள்ள முன்வர வேண்டும்.

## கடிதங்கள்

### யாழில் ஆளரவம் அற்ற பனம் காணிகளில்

# நுங்குகள் திருட்டு

யாழ்ப்பாணத்தில் நுங்கு திருட்டுகள் அதிகரித்து உள்ளதாகவும், இதனால் பலத்த பொருளாதார இழப்புக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் எனவும் எனவே, நுங்கு திருட்டுகளைக் கட்டுப்படுத்த உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பனம் காணி உரிமையாளர்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் வெப்பமான வானிலை காரணமாக, நுங்குக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அதனால் ஆளரவம் அற்ற தனியார் காணிகளுக்குள் உள்ள பனை மரங்களில், நுங்குகளை குலை குலையாக திருடர்கள் வெட்டி எடுத்துச் செல்கின்றனர்.

“காணிக்குள் விழும் பனம் பழங்கள் ஊடாகவே பனாட்டு செய்கிறோம்; பனம் பழங்களின் விதைகள் கொண்டு, பனம் பாத்தி செய்து, அதன் ஊடாகவே பனம் கிழங்கு, ஒடியல் என்பவற்றை பெற்றுக்கொள்கிறோம். பனம் பழத்தின் இளம் பதமாக உள்ள நுங்குகளை, குலை குலையாக திருடர்கள் வெட்டிச் செல்வதால், பனம் பழம் இல்லாது போகிறது. பனம் பழத்தின் ஊடாக பெற்றுக்கொண்ட எமது சிறிய வாழ்வாதாரம் இல்லாமல் போகின்றது. எனவே, உரிய தரப்புகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி, நுங்கு திருட்டுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனவும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

எம். றொசாந்த்

திருமணமான

# ஒரே மாதத்தில் பிரிவு



விஜய் டிவியில் ஒளிபரப்பான 'சிப்பிக்குள் முத்து' உட்பட பல சீரியல்களில் நடித்தவர் சம்யுக்தா. இவர் 'சிப்பிக்குள் முத்து' சீரியலில் நடித்த விஷ்ணுகாந்த் என்பவரை காதலித்து அதன் பின்னர் இருவீட்டார் சம்மதத்துடன் கடந்த மார்ச் மாதம் திருமணம் செய்து கொண்டார்.

இந்த நிலையில் திருமணமான ஒரே மாதத்தில் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து இருவரும் தங்கள் திருமண புகைப்படங்களை சமூக வலைதளங்களில் நீக்கினர்.

மேலும், விஷ்ணுகாந்த் பல 'யூடியூப்' சனல்களில் சம்யுக்தா குறித்த சில விஷயங்களை கூறிய நிலையில் அதற்கு விளக்கம் கொடுக்க நடிகை சம்யுக்தா இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ வெளியிட்டுள்ளார்.

சுமார் 2 மணி நேரத்திற்கும் அதிகமாக நீடிக்கும் இந்த வீடியோவில் விஷ்ணுகாந்த் கூறிய அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் அவர் பதில் அளித்துள்ளார்.

கடைசியாக தயவு செய்து என்னிடம் யாரும் பேட்டி எடுக்க அழைக்க வேண்டாம் என்றும் ஒரு நாளைக்கு 100 அழைப்புகளுக்கு மேல் வருகிறது என்றும் அவர்களுக்கெல்லாம் பேட்டி கொடுத்து, என்னுடைய நிலைமையை நான் விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# காஜல் அகர்வாலின் புதுத்தொழில்



தமிழில் 'பழனி' படத்தில் அறிமுகமாகி முன்னணி கதாநாயகியாக உயர்ந்தவர் காஜல் அகர்வால். தற்போது கமல்ஹாசனுடன் 'இந்தியன் 2' படத்தில் நடித்து வருகிறார்.

காஜல் அகர்வால் 2020இல் தொழிலதிபர் கௌதம் கிச்சலுவை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை உள்ளது.

இந்த நிலையில், காஜல் அகர்வால் சினிமாவை தாண்டி தற்போது சொந்தமாக அழகு சாதனப்பொருள் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து இருக்கிறார்.

கண் மை விற்பனை செய்யும் இந்த நிறுவனத்தின் தொடக்க விழாவில், கணவர் கௌதம்கிச்சலு கலந்து கொண்டு காஜல் அகர்வாலுக்கு முத்தம் கொடுத்து வாழ்த்தினார்.

கணவர் உதவி இல்லாமல் இந்தத் தொழிலை என்னால் தொடங்கி இருக்க முடியாது என்று காஜல் அகர்வால் தெரிவித்து உள்ளார். தொழிலதிபராக மாறிய காஜல் அகர்வாலுக்கு சக நடிகர், நடிகைகளும் ரசிகர்களும் வலைத்தளத்தில் வாழ்த்து தெரிவித்து உள்ளனர்.

# திரைப்படமாகும் சொந்தக் கதை



தமிழில் 'எலந்த பழம்' பாடல் மூலம் பிரபலமான மறைந்த நடிகை விஜய நிர்மலாவின் மகனும், மூத்த தெலுங்கு நடிகருமான நரேஷ் ஏற்கெனவே 2 முறை திருமணம் செய்து விவாகரத்து பெற்று 3ஆவதாக ரம்யா என்பவரை மணந்தார்.

பின்னர் ரம்யாவையும் விவாகரத்து செய்து விட்டு கன்னட நடிகை பவித்ரா லோகேஷை காதலித்து வருகிறார். இவரை திருமணம் செய்து கொண்டதாக கூறப்பட்டது.

நரேசுக்கு 60 வயது ஆகிறது. பவித்ரா லோகேசுக்கு 44 வயது. இவர்கள் இருவரும் ஹோட்டல் அறையில் ஒன்றாக இருந்தபோது நரேசின் முன்னாள் மனைவி ரம்யா செருப்பால் அடிக்கப்பாய்ந்த சம்பவம் பரபரப்பானது.

இந்த நிலையில் தனது சொந்த சர்ச்சை, காதல் விஷயங்களை மையமாக வைத்து நரேஷ், 'மல்லி பெள்ளி' (மீண்டும் திருமணம்) என்ற படத்தை எடுத்து வருகிறார்.

இதில் நரேசும், பவித்ராவும் ஜோடியாக நடிக்கின்றனர். நரேசின் தந்தையும், மறைந்த தெலுங்கு நடிகருமான கிருஷ்ணா கதாபாத்திரத்தில் சரத்பாபுவும், நடிகை விஜயநிர்மலா வேடத்தில் ஜெயசுதாவும் நடித்துள்ளனர்.

நரேஷ் கூறும்போது, "பவித்ரா லோகேசுடன் எனது இதயம் சங்கமம் ஆகிவிட்டது. எங்களுக்கு திருமணம் நடந்த மாதிரி உணர்கிறோம். நான் சொந்த வாழ்க்கையில் சில கஷ்டங்களை சந்தித்தேன். அதை படத்தில் சொல்லி இருக்கிறேன்" என்றார்.

# இரட்டை வேடத்தில் விஜய்?



'வாரிசு' படத்துக்கு பிறகு நடிகர் விஜய், லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'லியோ' என்ற திரைப்படத்தில் நடித்து வருகிறார். த்ரிஷா, பிரியா ஆனந்த், கௌதம் மேனன், சஞ்சய்தத், மிஷ்கின், மன்சூர் அலிகான், கதிர் உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள்.

மிஷ்கின், சஞ்சய்தத் இருவரும் வில்லன்களாக நடிப்பதாக கூறப்படுகிறது. 'லியோ' படப்பிடிப்பு காஷ்மீர் பகுதிகளில் 2 மாதங்கள் நடந்தது. தற்போது அங்கு படப்பிடிப்பை முடித்து விட்டு படக்குழுவினர் சென்னை திரும்பி உள்ளனர்.

தற்போது, பனையூர் பகுதியிலும், வடபழனியில் உள்ள ஸ்டுடியோவிலும் அரங்குகள் அமைத்து படப்பிடிப்பை நடத்தி வருகிறார்கள். இந்தப் படம் 'பாட்ஷாபட சாயலில் தயாராவதாக ஏற்கெனவே தகவல்கள் பரவின.

இந்தப் படத்தில் விஜய் இரட்டை வேடங்களில் நடிப்பதாக தகவல் வலைத்தளத்தில் பரவி வருகிறது. ஒரு விஜய்க்கு த்ரிஷா ஜோடியாகவும், இன்னொரு விஜய்க்கு பிரியா ஆனந்த் ஜோடி என்றும் பேசுகின்றனர். இந்தப் படம் ஆக்ஷன் திரில்லர் படமாக உருவாகின்றமை குறிப்பிடத்தக்கது.





முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு

# ஒட்டுசுட்டான் செயலகத்தில் பிரியாவிடை



முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கதிர்காமத்தம்பி விமலநாதன், 36 வருடகால அரச சேவையில் இருந்து, இந்த மாதம் 20 ஆம் திகதி ஓய்வு பெறுவதையொட்டி, மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் தோறும் பிரியாவிடை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மகத்தான பிரியாவிடை வைபவம் கடந்த வாரம் நடத்தப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழரின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான கோலாட்டத்துடன் அரசாங்க அதிபர் மற்றும் அவரின் பாரியார் திருமதி மதிலதா இருவரும் வரவேற்று அழைத்துவரப்பட்டனர். அத்துடன், பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் கலை நிகழ்வுகளும் ஆற்றுகை செய்து மகிழ்விக்கப்பட்டது.

மட்டக்களப்பு, கல்லடியை சேர்ந்த விமலநாதன், சிவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பதுடன் சிறந்த விளையாட்டு வீரரும் ஆவார். இலங்கை நிர்வாக சேவையில் 32 வருடகாலம் சேவையாற்றிய இவர், முந்தைய நான்கு வருடங்களும் ஆசிரியராகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வி.ரி சகாதேவராஜா













# குமுதினி படுகொலை நினைவேந்தல்

குமுதினி படுகொலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல், நேற்று (15) திங்கட்கிழமை நெடுந்தீவில் அனுஷ்டிக்கப்பட்டது.

குமுதினி படகில் படுகொலை செய்யப்பட்ட 36 பேரின் நினைவாக நெடுந்தீவு இறங்குதுறையிலுள்ள நினைவாலய வளாகத்தில் இந்நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

குமுதினி படுகொலை நினைவுத் தூபியில் நினைவுச் சுடர் ஏற்றல், மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந்தீவு ருத்திரனின் 'குருதியின் குமுறல்கள்' என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வுகளில் நெடுந்தீவு பகுதி மதத்தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி, நெடுந்தீவு துறைமுகத்தில் இருந்து 64 பயணிகளுடன் குறிகட்டுவான் நோக்கி குமுதினி படகு பயணித்துக் கொண்டிருந்த வேளை, நடுக்கடலில் கடற்படையால் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என 36 பேர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

எம். றொசாந்த்






# சமஷ்டி கருத்தாடல்



வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (14) பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து, சமஷ்டி அதிகாரப் பகிர்வு தொடர்பான கருத்தாடல் திருகோணமலை மாநகராட்சி ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

அ. அச்சுதன்

சென்னை

# 500 மதுபான கடைகளை மூட நடவடிக்கை



தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்தநாளான ஜூன் 3ஆம் திகதி, 500 மதுபான கடைகளை மூட தமிழக அரசு முடிவுசெய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் 5,329 மதுபானக்கடைகள் உள்ளன. இக் கடைகள் மூலம் இந்திய மதிப்பில் ஆண்டுக்கு 44,000 கோடி வரை அரசுக்கு வருமானம் கிடைத்து வருகின்றது.

எனினும் மாநிலம் முழுவதும் 500 மதுபான கடைகளை மூடுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அமைச்சர் செந்தில்பாலாஜி ஏப்ரல் மாதம் சட்டசபையில் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பை செயற்படுத்தும் விதமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த கடைகளை மூடலாம் என்று பட்டியல் எடுக்கப்பட்டு வருகின்றது.

அதன்படி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ள கோவில்களுக்கு அருகில் இருக்கும் கடைகளை மூடுவது, 500 மீற்றர் சுற்றளவில் 2 கடைகள் இருந்தால் அதில் ஒரு கடையை மூடுவது என்று பட்டியல் எடுக்கப்பட்டு வருகின்றது.

அதன்படி 500 கடைகளை ஜூன் 3ஆம் திகதி முதல் மூடுவதற்கு அரசு ஏற்பாடு செய்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஐ.பி.எல்: சென்னையை வென்ற கொல்கத்தா



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), சென்னையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் உடனான போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சென்னை

சென்னை: 144/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷிவம் டுபே ஆ.இ 48 (34), டெவோன் கொன்வே 30 (28), இரவீந்திர ஜடேஜா 20 (24), ருத்துராஜ் கைகவாட் 17 (13), அஜின்கியா ரஹானே 16 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுனில் நரைன் 2/15 [4], வருண் சக்கரவர்த்தி 2/36 [4], ஷர்துல் தாக்கூர் 1/15 [3], வைபவ் அரோரா 1/30 [4])

கொல்கத்தா: 147/4 (18.3 ஓவ.) (துடுப்பாட்டம்: நிதிஷ் ரானா ஆ.இ 57 (44), ரிங்கு சிங்க் 54 (43) ஓட்டங்கள். பந்துவீச்சு: தீபக் சஹர் 3/27 [3])

போட்டியின் நாயகன்: ரிங்கு சிங்

முன்னதாக ஜெய்ப்பூரில் நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றிருந்தது.

இந்நிலையில் லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸும் மும்பை இந்தியன்ஸும் மோதவுள்ளன.

திருப்பூரில்

# அரசு அலுவலகத்தில் நிர்வாண அகோரி பூஜை

அரச அலுவலகத்தில் அகோரிகளை வைத்து பூஜை நடத்தப்பட்ட சம்பவம் திருப்பூரில் இடம்பெற்றுள்ளது.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி அரசு அலுவலகத்தில் சில நாள்களுக்கு முன்னர் அகோரிகளை வைத்து பூஜை நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக திராவிடர் விடுதலை கழகத்தினர் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அளித்துள்ள மனுவில், "பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் விதமாகவும் பொதுமக்கள் கூடும் இடத்தில் இவ்வாறு மதம் சார்ந்த நிர்வாண சாமியார்களை வைத்து பூஜை செய்வது அதிர்ச்சி அளிக்கின்றது.

எனவே அரச அலுவலகத்திற்குள் அகோரிகளை வைத்து பூஜை செய்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என மனுவில் குறிப்பிட்டுள்ளது.




மும்பை

# பிரியங்காவை 7 வயதில் ரசித்த நிக் ஜோன்ஸ்

2000ஆம் ஆண்டு உலக அழகி பட்டத்தை வென்ற பிரியங்கா சோப்ரா, தமிழில் விஜய் ஜோடியாக 'தமிழன்' படத்தில் அறிமுகமானார். தொடர்ந்து இந்தியில் முன்னணி கதாநாயகியாக உயர்ந்தார். 2018 ஆம் ஆண்டு அமெரிக்க பாப் பாடகர் நிக் ஜோனசை மணந்து தற்போது ஹொலிவூட் படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில், பிரியங்கா சோப்ரா அண்மையில் அளித்துள்ள பேட்டியில், தனது கணவர் நிக் ஜோனாஸ் குறித்து சுவாரஸ்யமான தகவலொன்றைத் தெரிவித்துள்ளார். அதில் "நான் உலக அழகி பட்டத்தை வென்றபோது, எனக்கு 17 வயது. நிக் ஜோனாஸுக்கு 7 வயது. உலக அழகி போட்டி இலண்டனில் நடந்தது. அப்போது எனது மாமியார், மாமனார், நிக் ஆகியோர் அப்போட்டியைக் காண அங்கு வருகை தந்தனர்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.



## ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# சம்பியனான பார்சிலோனா

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில் பார்சிலோனா சம்பியனாகியுள்ளது.

அஸ்பன்யோலின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 4-2 என்ற கோல் கணக்கில் வென்றமையைத் தொடர்ந்தே நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் பார்சிலோனா சம்பியனாகியுள்ளது.

இதேவேளை, எல்ஷேயின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் தோல்வியடைந்தது.




## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# பிறைட்டனிடம் தோற்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் தோற்றது.

இந்நிலையில், எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி வென்றது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 85 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான சிற்றி காணப்படுகின்றது. 81 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 66 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், அதே புள்ளிகளுடன் ஆனால் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் நான்காமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில் ஏனைய அணிகளை விட ஆர்சனல் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.



அமெரிக்கா

# பிறக்காத குழந்தைக்கு அறுவை சிகிச்சை

கருப்பைக்குள் வளர்ந்து வரும் சிசுவுக்கு, மூளை அறுவை சிகிச்சை செய்து அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவர் குழு சாதனை படைத்துள்ளது.

கருவிலிருந்த குறிப்பிட்ட சிசுவுக்கு *Venus of Galen malformation* என்ற நோய் இருப்பது கண்டறியப்பட்டது. இந்நிலை காரணமாக மூளையில் நரம்பு தொடர்பான பிரச்சினை ஏற்பட்டு,குழந்தை பிறந்த உடனேயே மாரடைப்பு ஏற்பட்டு இறக்கும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.



மூளையிலிருந்து இதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்த நாளம் சரியாக வளர்ச்சியடையாத போதே இச் சிக்கல் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.


இந்நிலையில் 34 வாரங்கள் மட்டுமே வளர்ச்சியடைந்த சிசுவின் உயிரைக் காப்பாற்ற அரிய மூளை அறுவை சிகிச்சையொன்றை அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் 10 பேர், சில வாரங்களுக்கு முன்னர் முன்னெடுத்திருந்தனர்.

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாகாணத்தில் உள்ள பாஸ்டன் நகரில் இந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது.

தற்போது அந்தச் சிசு பிறந்து நலத்துடன் இருப்பதாகவும்,அதற்கு *Denver* எனப் பெயரிடப்பட்டு உள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

துருக்கி

# வீட்டில் இருந்தபடியே வாக்களித்த ருமேஷா



ருமேஷா ஜெல்கி என்ற 24 வயதான யுவதி, 2021ஆம் ஆண்டு உலகின் மிக உயரமான பெண் என்ற கின்னஸ் சாதனையை படைத்திருந்தார்.

'*Weaver Syndrome*' என்ற அரிய வகை மரபணு நோயுடன் பிறந்ததால், அவருக்கு அபார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அவருக்கு நடந்து சென்று தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுபற்றி தகவல் அறிந்த தேர்தல் அதிகாரிகள் அவரது வீட்டுக்குச் சென்று வாக்களிக்கும் வசதியை ஏற்படுத்தி கொடுத்துள்ளனர். இதுகுறித்த புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்கா

# 74 நாள்கள் நீருக்கடியில் வாழ்ந்து சாதனை



74 நாள்கள் நீருக்கடியில் வாழ்ந்து அமெரிக்காவின் ஃபுளோரிடாவை சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

ஜோசஃப் டிடுரி என்ற அந்த ஆராய்ச்சியாளர், ஆழ்கடலில் முழுமையாக அடைக்கப்பட்ட அறை போன்ற வசிப்பிடத்தில், தினசரி நடவடிக்கைகளை மேற்கொண்டு வாழ்ந்து வந்துள்ளார்.

நீருக்கடியில் தீவிர அழுத்தத்தில் வாழும் இந்தப் பரிசோதனை, எதிர்கால ஆழ்கடல் பணிகளுக்கு உதவியாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் நீர்வாழ் ஆராய்ச்சியை ஒருங்கிணைத்து மாணவர்களுக்கு கற்பிப்பதே இந்தப் பரிசோதனையின் குறிக்கோள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து 74 நாள்கள் நீருக்கடியில் இருந்துவரும் அவர், 100 நாள்களை இலக்காகக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## கூடைப்பந்தாட்டத்தில்

# யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய ரீதியில் சாதனை

இலங்கை பாடசாலை கூடைப்பந்தாட்ட சங்கத்தால் தேசிய ரீதியாக நடாத்தப்பட்ட 16 வயதுக்கு உட்பட்டோருக்கான டிவிசன் 'சி' பிரிவு கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் சம்பியனாகியுள்ளது.

கொழும்பில் சனிக்கிழமை (14) நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென். பிரிட்ஜெட்ஸ் கல்லூரி அணியினை முதல் கால் பாதியில் 4:4 ரீதியிலும், இரண்டாவது கால்பாதியில் 8:8 ரீதியிலும், மூன்றாவது கால்பாதியில்16:10 ரீதியிலும், நான்காவது கால் பாதியில் 26:14 ரீதியிலும் கைப்பற்றி யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட 16 வயது பிரிவு போட்டியில் வடமாகாண பாடசாலை ஒன்று முதலாவது சம்பியனை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் சிறந்த வீராங்கனையாக ஜெபோஷினி கைசிங் ரவீந்திரகுமார் தெரிவு செய்யப்பட்டதுடன் போட்டியின் சிறந்த தற்காப்பு வீராங்கனையாக விஜயரூபன் சகானா தெரிவானார்.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட கூடைப்பந்தாட்ட அணிக்கு தனுஸ்காந்த் ராஜசோபனா பயிற்றுவிப்பாளரராக கடமையாற்றுகின்றார்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 16 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.